2. அறிக்கைகள் அளித்தல் (தொடர்ச்சி).

(ஆ) வேலை நீக்கம் செய்யப்பெற்ற காவலர்கள் குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சார்பில் இந்த முக்கியமான அறிவிப்பை வெளியிடுவதற்கு அனுமதி வழங்கு மாறு கேட்டுக்கொளகிறேன்.

காவல் துறையைச் சார்ந்த ஒரு பிரிவினர் அண்மையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதும், அதன் காரணமாக அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதும் அவை உறுப்பினர்கள் அறிந்ததே. வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களில் பெரும்பான்மையோர் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். இன்னும் மீதமுள்ள ஏறத்தாழ 700 பேர் தற்போது வேலை நீக்கத்தில் இருந்து வருகின்றனர். மிகக் கடுமையான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான சிலரைத் தவிர மற்ற அனைவரையும் (ஏறத்தாழ 600-க்கு மேற்பட்டவர்கள்) மீண்டும் வேலைக்கு அமர்த்த அரசு முடிவு செய்துள்ளது. அவர்கள் மேல் உள்ள குற்றங்களை பரிசீலனை செய்து முடிவு எடுப்பதற்கு டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ், மூன்று இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் ஆகியோர் அடங்கிய நான்கு பேர்களை உள்ளடக்கிய குழு ஒன்று நியமிக்கப்படுகிறது. அந்தக் குழு ஆய்வு செய்து தக்க முடிவுகள் எடுக்கும்.

காவலர்கள் கிளர்ச்சி நடைபெற்றபோது, அதில் ஈடுபடாமல் கடமை உணர்வோடு பணியாற்றிய காவலர்களுக்கு முன்னதான ஊதிய உயர்வு (advance increment) ஒன்றும் அளிக்க அரசு முடிவு செய்திருக்கிறது.

இந்த அறிவிப்பை மன்ற உறுப்பினர்கள் மனதார வரவேற் பார்கள் என்று நான் நம்புகிறேன்.

(இ) விவசாயிகளுக்கு அளிக்கப்பெறும் சலுகைகள் குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சார்பில் இந்த முக்கியமான அறிவிப்பை வெளியிடுவதற்கு அனுமதி வழங்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு பல்வேறு வசதிகளைச் செய்து தருவதன் மூலம் வேளாண்மை உற்பத்தியைப்பெருக்குவதிலும், விவசாயிகளுக்கு ஊக்கமளிப்பதிலும், தமிழகஅரசு தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. மத்திய அரசுடன் முதலமைச்சரும், நானும், மின்சாரத்துறை அமைச்சரும் கடன்சுமை குறைப்பு பற்றியும் அண்மையில் பேச்சு வார்த்தைகள் நடத்தி வந்துள்ளோம். அவற்றைத் தொடர்ந்து வற்புறுத்துவோம்.

விவசாயிகட்கு மேலும் சில சலுகைகளை அளிக்க அரசு முடிவு செய்துள்ளதை அறிவிக்க விரும்புகிறேன். 1976 முதல் விதிக்கப்பட்ட தனித் தண்ணீர் தீர்வையை அரசு வசூலிப்பதில்லையென்றும், அத்தீர்வையைக் கைவிடுவதென்றும் முடிவு செய்துள்ளது. இதன் விளைவாக, அரசின் பாசன வசதி பெறும் விவசாயிகட்கு தீர்வை குறைப்பு ஏற்படும்; சலுகையின் பலன் சுமார் ரூபாய் இரண்டு கோடியாகும்.

அரசின் பாசன வசதி பெறாத விவசாயிகட்கும் சலுகை அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. மின்சார மீட்டர் மாதக் கட்டணத்தை ரூபாய் ஐந்திலிருந்து ரூபாய் நான்காக இந்த அரசு குறைத்ததை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். அதனை மீண்டும் பாதியாகக் குறைத்து மாதக் கட்டணம் இனி ரூபாய் இரண்டாக அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இதன் விளைவாக மின் வாரியத்திற்கு சுமார் 1.75 கோடி இழப்பு ஏற்படும். புன்செய், நன்செய் விவசாயிகள் நலன் கருதி அரசு எடுத்துள்ள இம்முடிவுகளை மன்றம் வரவேற்குமென நம்புகிறேன். மத்திய அரசும், மற்ற சலுகைகள் தருவதற்கான முயற்சிகளை விரைவில் எடுக்குமென்றும் நம்புகிறேன்.

விவசாயிகள் கிளர்ச்சியின்போது கொலை, கொள்ளை, போன்ற வன்முறைச் செயல்களில் நேரடியாக ஈடுபட்டவர்கள் தவிர, மற்றவர்கள் மீதான வழக்குகள் அனைத்தையும் திரும்பப் பெற அரசு முடிவு செய்துள்ளதையும் அறிவிக்க விரும்புகிறேன்.

6. தன்னிலை விளக்கம் (தொடர்ச்சி).

(ஆ) உறுப்பினர்களைப்பற்றி பேரவைத் தலைவர் குறிப்பிட்டது குறித்து.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தங்கள் அனுமதியோடு தன்னிலை விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காப்பியில் திரு. உமாநாத் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தை விவாதிக்கும்போது நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிவிட்டு